| 3. | Student Welfare & Development | முனைவர் து.இராமசாமி,<br>வேதியல் துறை. |
| | | பேரா. மு.மலர்விழி,<br>கணிதவியல் துறை. |
| 4. | Internal Complaints | முனைவர் ப.கோ.அரவிந்தன்,<br>இயற்பியல் துறை. |
| | | பேரா. இ.பாரதி,<br>கனிணி அறிவியல் துறை. |
| 5. | Placement cell & Career Guidance | பேரா. வ.க.சிவக்குமார்,<br>விலங்கியல் துறைத்தலைவர். |
| | | முனைவர் எல்.இராஜசேகரன்,<br>இயற்பியல் துறை. |
| 6. | Parents Teacher Association | முனைவர் சு.காவேரியம்மாள்,<br>தாவரவில் துறைத்தலைவர். |
| 7. | Old Student Association | பேரா. ஆ.தாமரை,<br>இயற்பியல் துறைத்தலைவர். |



| வ. எண். | Committees | பெயர் |
|---|---|---|
| 8. | Sports | முனைவர் அ.ஸ்ரீதர்,<br>கணிதவியல் துறை. |
| 9. | Library | பேரா. சி.செந்தில்குமார்,<br>கணிதவியல் துறை. |
| 10. | NCC | லெப்டினன்ட் பேரா. லோ.விக்ரமன்,<br>கணிதவியல் துறை. |
| 11. | NSS | முனைவர் செ.கருணாநிதி,<br>கணிதவியல் துறைத்தலைவர். |
| | | முனைவர் கா.அருளானந்தம்,<br>கனினிப்பயன்பாட்டியல் துறைத்தலைவர். |
| | | முனைவர் பா.புவிஅரசு,<br>கணிதவியல் துறை. |
| | | பேரா. அ.சு.கற்பகம்,<br>பொருளியல் துறை. |
| 12. | YRC | பேரா. மோ.கோமதி,<br>ஆங்கிலத்துறை. |
| 13. | RRC | பேரா. மோ.கோமதி,<br>ஆங்கிலத்துறை. |
| 14. | Fine Arts | பேரா. கி.விஜயரங்கம்,<br>வரலாற்றுத் துறைத்தலைவர். |
| 15. | Rotract | முனைவர் அ.மலர்,<br>தமிழ்த் துறைத்தலைவர். |
| 16. | College Union & Association | முனைவர் ப.வாசுகி,<br>ஆங்கிலத் துறைத்தலைவர். |
| 17. | UGC | முனைவர் தெ.கௌதமன்,<br>வேதியல் துறைத்தலைவர். |
| 18. | NAAC | முனைவர் தெ.கௌதமன்,<br>வேதியல் துறைத்தலைவர். |

| வ. எண். | Committees | பெயர் |
|---|---|---|
| 19. | IQAC | முனைவர் **தெ.கௌதமன்,**<br>வேதியல் துறைத்தலைவர். |
| 20. | Entrepreneurship Development Cell (EDC) | முனைவர் **சி.சகாயராஜ்,**<br>வணிகவியல் துறைத்தலைவர். |
| 21. | Women Development Cell | முனைவர் **சு.காவேரியம்மாள்,**<br>தாவரவியல் துறைத்தலைவர். |
| | | முனைவர் **அ.மலர்,**<br>தமிழ்த் துறைத்தலைவர். |
| 22. | Scholarships | முனைவர் **செ.கருணாநிதி,**<br>கணிதவியல் துறைத்தலைவர். |
| 23. | Bus Pass | முனைவர் **வ.பழனிசாமி,**<br>வணிகவியல் துறை. |
| 24. | AICTE | முனைவர் **கா.அருளானந்தம்,**<br>கணினிப்பயன்பாட்டியல் துறைத்தலைவர். |
| 25. | AISHE | முனைவர் **கா.அருளானந்தம்,**<br>கணினிப்பயன்பாட்டியல் துறைத்தலைவர். |
| 26. | NIRF | முனைவர் **கா.அருளானந்தம்,**<br>கணினிப்பயன்பாட்டியல் துறைத்தலைவர். |
| 27. | RUSA | முனைவர் **கா.அருளானந்தம்,**<br>கணினிப்பயன்பாட்டியல் துறைத்தலைவர். |
| 28. | ICTACT | முனைவர் **கா.அருளானந்தம்,**<br>கணினிப்பயன்பாட்டியல் துறைத்தலைவர். |



## கல்விக் கட்டண விவரம்

**முதலாமாண்டு PD-I கல்லூரிக் கட்டணம்**

| கட்டண விவரம் | பி.ஏ./பி.எஸ்ஸி/ பி.காம். | பி.எஸ்ஸி கணிப்பொறி அறி | எம்.ஏ/எம்.எஸ்ஸி/ எம்.காம். | பி.எச்டி/ எம்.சி.ஏ. |
|---|---|---|---|---|
| கல்லூரிப்பேரவை | ரூ. 20.00 | ரூ. 20.00 | ரூ. 20.00 | ரூ. 30.00 |
| உடற்கல்வி | ரூ.100.00 | ரூ.100.00 | ரூ.100.00 | ரூ.100.00 |
| கல்லூரி நாள் விழா | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| கல்லூரி நாட்காட்டி | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| நூலகம் | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 120.00 |
| எழுதுபொருள் | ரூ. 10.00 | ரூ. 110.00 | ரூ. 10.00 | ரூ. 210.00 |
| ஒலி, ஒளிக்கல்வி | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| கல்லூரி ஆண்டுமலர் | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| சமூக சேவை | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| மொத்தம் | ரூ.190.00 | ரூ.290.00 | ரூ.190.00 | ரூ. 540.00 |

**PD-II சிறப்புக் கட்டணம்**

| | அனைத்து இளநிலைப் பிரிவுகள் (UG) | எம்.சி.ஏ./ எம்.எஸ்ஸி |
|---|---|---|
| சேர்க்கைக் கட்டணம் | ரூ. 5.00 | - |
| மருத்துவக் கட்டணம் | ரூ. 5.00 | - |
| ஆய்வகக் கட்டணம் (அறிவியல் பிரிவுக்கு மட்டும்) | ரூ. 20.00 | ரூ. 120.00 |
| சான்றிதழ் சரிபார்த்தல் | ரூ. 50.00 | - |
| பட்டமளிப்பு விழா | ரூ. 25.00 | ரூ. 25.00 |
| படிப்புக் கட்டணம் (Tuition Fee) | முனைவர் பட்டம் (Ph.D.) ரூ.1000.00 | ரூ.570/- / எம்.ஃபில் |

**பல்கலைக் கழகக் கட்டணம்**

| | அனைத்து இளநிலைப் பிரிவுகள் (UG) | அனைத்து முதுநிலைப் பிரிவுகள் (PG) |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூ. 80.00 | ரூ. 100.00 |
| மெட்ரிகுலேஷன் கட்டணம் | ரூ. 30.00 | - |
| வளர்ச்சி மேம்பாடு | ரூ. 30.00 | ரூ. 30.00 |
| இளைஞர் விழா | ரூ. 30.00 | ரூ. 30.00 |
| உடற்கல்வி | ரூ. 60.00 | ரூ. 40 / 60.00 |
| நூலகம் | ரூ. 60.00 | ரூ. 40 / 60.00 |
| அறிந்தேற்புக் கட்டணம் | ரூ. 100.00 | இல்லை (ரூ.200.00 பிற பல்கலைக் கழகத்திற்கு மட்டும்) |

பெற்றோர் ஆசிரியர் கழகம் மூன்றாண்டுக் கட்டணம் ரூ.160.00
கணினி அறிவுத்திட்டம் (Computer Literacy Program) முதலாண்டு மட்டும் ரூ.700.00

# இரண்டாமாண்டு / மூன்றாமாண்டு

## கல்விக் கட்டணங்கள்

படிப்புக் கட்டணம் ரூ. 1000.00 (பி.எச்.டி.)
ஆய்வகக் கட்டணம் ரூ. 20.00 (அறிவியல் பிரிவு)

## PD-I கல்லூரிக் கட்டணம்

| கட்டண விவரம் | பி.ஏ./பி.எஸ்ஸி/ பி.காம். | பி.எஸ்ஸி கணிப்பொறி அறி | எம்.ஏ/எம்.எஸ்ஸி/ எம்.காம். | பி.எச்டி/ எம்.சி.ஏ. |
|---|---|---|---|---|
| கல்லூரிப்பேரவை | ரூ. 20.00 | ரூ. 20.00 | ரூ. 20.00 | ரூ. 30.00 |
| உடற்கல்வி | ரூ.100.00 | ரூ.100.00 | ரூ.100.00 | ரூ.100.00 |
| கல்லூரி நாள் விழா | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| கல்லூரி நாட்காட்டி | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| நூலகம் | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 120.00 |
| எழுதுபொருள் | ரூ. 10.00 | ரூ. 110.00 | ரூ. 10.00 | ரூ. 210.00 |
| ஒலி, ஒளிக்கல்வி | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| கல்லூரி ஆண்டுமலர் | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| சமூக சேவை | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 | ரூ. 10.00 |
| மொத்தம் | ரூ.190.00 | ரூ.290.00 | ரூ.190.00 | ரூ.540.00 |

## கல்லூரிக் கட்டணம் செலுத்துவதற்குரிய விதிமுறைகள்

1. கல்லூரியின் பெயர்ப் பட்டியலில் இடம் பெற்றுள்ள மாணவர்கள் ஒவ்வொரு பருவத்திலும் கட்டணத்தை மொத்தமாகச் செலுத்திட வேண்டும்.

2. ஒவ்வொரு பருவத்திற்கும் உரிய பயிற்சிக் கட்டணத்தை (Tuition Fees) மொத்தமாக ஒவ்வொரு பருவத்தின் பத்தாவது பணிநாளுக்குள் செலுத்திவிட வேண்டும். பிறகட்டணங்கள் முதல் பருவத்திலேயே முழுமையாகக் கட்டப்பட வேண்டும்.

3. ஒறுப்புடன் (அபராதம்) செலுத்துதல்

குறிப்பிட்ட நாளுக்குள் கட்டணம் செலுத்தத் தவறினால் ஒவ்வொரு பணிநாளுக்கும் ரூ.1.00 வீதம் ஒறுப்பு விதிக்கப்படும். பருவம் தொடங்கி ஒரு மாதத்திற்குள் கட்டணம் செலுத்தவில்லை என்றால் அம்மாணவரின் பெயர் பதிவேட்டினின்றும் நீக்கப்படும். அவ்வாறு பெயர் நீக்கப்பட்ட மாணவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் வகுப்பிற்குச் செல்லுதல் கூடாது. கட்டணம் செலுத்தியதன் இரசீதினை உரிய துறைத் தலைவரிடம் காண்பித்து அனுமதிச்சீட்டு பெற்றபின்னரே வகுப்பிற்குள் அனுமதிக்கப்படுவர்.

ஒரு மாதம் என்பது விடுமுறைக்குப் பிறகு கல்லூரி திறக்கப்பட்ட நாள் முதல் முப்பது நாள்களாகும்.

மாணவர்கள், உதவித்தொகை, கட்டணச்சலுகை முதலியவற்றுக்காகக் காத்திராமல் கட்டணங்களைச் செலுத்துவதற்குரிய கடைசி நாளுக்கு முன்பாகவே கல்விக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் முதலியவற்றைச் செலுத்தி விட வேண்டும்.

கல்லூரிக்கான எல்லாச் சேர்க்கைகளும் தற்காலிகமானவையே, மாணவர்கள் தவறான வழிமுறைகளைக் கையாண்டோ, பொய்யான தகவல்களைத் தந்தோ கல்லூரியில் சேர்ந்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களின் சேர்க்கை இரத்து செய்யப்படும்.

கல்லூரியில் சேர்க்கப்பட்ட பிறகு ஒரு மாணவர் தொடர்ந்து ஐந்து நாள்களுக்கு அல்லது அதற்குமேல் வகுப்புகளுக்கு வராமல் இருந்தால் அவர் பெயர் பெயர்ப்பட்டியலில் இருந்து நீக்கப்படும்.

**கவனிக்கவும் : கல்லூரி அலுவலகத்தில் பணம் கட்டும் பொழுதெல்லாம் கொடுக்கப்படும் இரசீதுகளைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**



## 2. கட்டணச் சலுகைகளும், உதவித்தொகைகளும்

1. தமிழ்நாடு அரசு கல்வி விதிகள் 92-ன் படி, தகுதியுடைய மாணவர்களுக்குக் கட்டணச் சலுகைகள், உதவித்தொகைகள் போன்றவை வழங்கப்படும். இவற்றைப் பெறத் தகுதியுடைய இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மாணவர்கள் கல்லூரி திறந்த 10 நாள்களுக்குள் சலுகையைப் புதுப்பிக்கக் கோரி விண்ணப்பிக்க வேண்டும். தகுதியுடைய புதிய மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்த 10 நாள்களுக்குள், சலுகை வேண்டி விண்ணப்பிக்க வேண்டும்.

2. கல்லூரி வேலை நாள்களுக்குள் 75 விழுக்காடு நாள்களுக்கு வகுப்புக்கு வராத மாணவர்கள் கல்விச்சலுகை, பிற்பட்டோர் / ஆதிதிராவிட நல உதவித்தொகை முதலிய சலுகைகளைப் பெறத் தகுதியற்றவராவர்.

## உதவித்தொகைகள் :

<u>பட்டியல் வகுப்பினர் நல உதவித் தொகை :</u>

1. பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ மாணவியர் களுக்குப் பெற்றோரின் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.3,00,000/- வரை உள்ளவர்களுக்கு மத்திய அரசு பட்டியல் நல உதவித்தொகை வழங்கப்படும்.

2. மதம் மாறிய கிறித்துவ மாணவ மாணவியர் மற்றும் மத்திய அரசு பட்டியல் வகுப்பினர் நல உதவித்தொகை பெறத் தகுதியற்றவர்களுக்குப் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/- வரை உள்ளவர்களுக்கு மாநில அரசு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

3. உதவித்தொகை பெறத் தகுதியற்ற பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ மாணவியர்களுக்குப் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் கருத்தில் கொள்ளாமல் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வித்திட்டத்தின் கீழ்த் தேர்வுக்கட்டணம் மற்றும் கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய பிற தனிக்கட்டணங்கள் வழங்கப்படும்.

<u>4.தகுதி மான்யத்தொகை :</u>

பிளஸ் 2 தேர்வில் 60% மற்றும் அதற்குமேலும் மதிப்பெண் பெற்றுக் கடந்த ஆண்டில் முதல் முயற்சியில் தேர்ச்சிபெற்ற பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ, மாணவியர்களுக்குத் தனித்தகுதி மான்ய (Adhocmerit Grant) உதவித்தொகை வழங்கப்படும்.

<u>5.பிற்பட்டோர் / மிகவும் பிற்பட்டோர் நல உதவித்தொகை :</u>

பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்குப் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2,50,000/-க்கு மேற்படாமல் இருந்தால் பிற்பட்டோர் நல உதவித்தொகை வழங்கப்படும்.

<u>6.முதல் பட்டதாரி உதவித்தொகை :</u>

பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவரின் குடும்பத்தில் பெற்றோர் உட்பட இதற்கு முன்னர் வேறு எவரும் பட்டப்படிப்பு பயிலாமல் இம்மாணவ / மாணவியர் மட்டும் இப்போதுதான் முதலாவதாகப் பட்டப்படிப்பு பயில்பவராக இருந்தால், முதல் பட்டதாரி மாணவருக்கான உதவித்தொகை வழங்கப்படும். ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

<u>7.வருகைப்பதிவு :</u>

முந்தைய கல்வியாண்டில் 75% வருகைப்பதிவு உள்ள மாணவ, மாணவியர்கள் மட்டும் நடப்புக் கல்வியாண்டிற்கான உதவித்தொகையைப் பெறத் தகுதியுடையவர் ஆவர்.

8. இளங்கலை மற்றும் இளமறிவியல் பட்ட வகுப்புகளைத் தமிழ்மொழி வழியாகப் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டு தோறும் ரூ.400/- வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

9.ஈ.வே.ரா.நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டமேற்படிப்புத்திட்டம் :

இக்கல்லூரியில் முதலாம் ஆண்டு பட்டமேற்படிப்பு மாணவியருக்கு ஈ.வே.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டமேற்படிப்புத் திட்டத்தின் கீழ் இலவசக்கல்வி வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு இது இரண்டாமாண்டும் தொடரப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ்ப் பிற்பட்ட மற்றும் முற்பட்ட இனமாணவியர்களுக்கு (Backward Class & Forward Communities) அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்குமானால் அவர்களுக்குப் படிப்புக் கட்டணச் (Tuition Fees) சலுகை மட்டும் வழங்கப்படும். இச்சலுகை பெறுபவர்கள் இதர உதவித்தொகைகளைப் பெறத்தகுதியற்றவராவர். பிறவிவரங்களைக் கல்லூரி அலுவலகத்தில் வேலை நேரங்களில் பெறலாம்.

10. பாதுகாப்புப் படை/முன்னாள் படைவீரர்/தேசிய மாணவர் படை அலுவலர்கள் ஆகியோரின் குழந்தைகளுக்குப் படிப்பு உதவித்தொகை வழங்கப்படும். மேலும் தேசிய மாணவர் படையில் உள்ள மாணவர்கள் கட்க்வாசலா (Kedakwasala) என்ற NCC பயிற்சிப் பள்ளிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்களுக்கும் படிப்பு உதவித்தொகை வழங்கப்படும். மேலும் தகவல்களைக் கல்லூரி அலுவலத்தில் வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

11. உழவர் பாதுகாப்பு உதவித்தொகை :

தமிழக அரசின் உழவர் சான்றிதழ் வைத்திருக்கும் குடும்பத்தைச் சேர்ந்த அனைத்து இன மாணவர்களும், வேறெந்த படிப்புதவித் தொகையையும் பெறாத நிலையில், உழவர் பாதுகாப்பு உதவித்தொகையைப் பெறத் தகுதியுடையவர் ஆவர்.

12.கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கான அறக்கட்டளைப் பரிசுகள் :

இக்கல்லூரியில் பயிலும் மாணவர்கள், தங்கள் பட்ட வகுப்பில் பயிலும் பாடங்களில் சிறந்த மதிப்பெண்கள் பெற்று முதன்மையாகத் தேர்ச்சி பெற்றால், அவர்களுக்குப் பரிசுகள் வழங்க உள்ளூர்ப் பெருந்தகைகளால் கீழ்க்காணும் அறக்கட்டளைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த முதலீட்டிற்கு உரிய ஓராண்டு வட்டித் தொகை பரிசுத் தொகையாகவும், ஒரு பாராட்டிதழும் வழங்கப்படும். அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | அறக்கட்டளையை உருவாக்கியவர் | அறக்கட்டளைப் பரிசின்பெயர் | அறக்கட்டளைத் தொகை | பரிசுக்குரிய பாடம் |
|---|---|---|---|---|
| 1. | திரு. கே.பி.மார்கபந்து முதலியார், சரவணா தியேட்டார், குடியாத்தம். | திரு. கே.பி.மார்கபந்து முதலியார், அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பகுதி 1 தமிழ்ப்பாடத்தில் முதல் மதிப்பெண் வெற்றவருக்கு |
| 2. | திரு. ஆர்.பரந்தாமன், பி.எஸ்ஸி., நிர்வாக பங்குதாரர், ஸ்ரீலட்சுமி சரஸ்வதி மோட்டார் சர்வீஸ், குடியாத்தம். | திருமதி. லட்சுமி காந்தம்மாள் பி.ராஜகோபால் நாயுடு அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பகுதி 1 தெலுங்குப்பாடத்தில் முதல் மதிப்பெண் வெற்றவருக்கு |
| 3. | திரு. ஏ.முகமது அமீன் சாயபு, பங்குதாரர் எஸ்.பீடி மண்டி, சந்தப்பேட்டை, குடியாத்தம். | திருமதி. பஷிருன்னிசா அபிபுர் ரஹ்மான்அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பகுதி 1 உருதுப்பாடத்தில் முதல் மதிப்பெண் வெற்றவருக்கு |
| 4. | திரு. எம்.ஜி.அமிர்தலிங்கம், பி.ஏ.பி.எல். நிர்வாக இயக்குநர், ஸ்ரீ ராஜேஸ்வரி மில்ஸ், குடியாத்தம். | திரு. ரத்தினம்மாள் கோவிந்தராஜ் முதலியார் அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பகுதி 2 ஆங்கிலப்பாடத்தில் முதல் மதிப்பெண் வெற்றவருக்கு |
| 5. | திரு. ஜி.எம்.ஜெயராமன், நகை வியாபாரம், 7, சன்னதி தெரு, நெல்லூர்ப்பேட்டை, குடியாத்தம். | திரு.ஜி.ஆர்.முனிரத்தினம்ஆச்சாரி அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பி.ஏ., வொருளியல் பாடத்தில் முதல் மதிப்பெண் வெற்றவருக்கு |
| 6. | திரு. என்.சுசீலா, எம்.ஏ.,பி.எட்., டாக்டர்.என்.சிவமூர்த்தி,எம்.பி.பி.எஸ்., திரு.என்.விஸ்வநாதன், பி.எஸ்.ஸி.,பி.எட்., 28, அண்ணாதெரு, குடியாத்தம். | கல்விக்காவலர் நடேசன் அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பி.ஏ., இணைப்பாடம் வரலாறு பாடத்தில் முதல் மதிப்பெண் வெற்றவருக்கு |

| வ. எண். | அறக்கட்டளையை உருவாக்கியவர் | அறக்கட்டளைப் பரிசின்பெயர் | அறக்கட்டளைத் தொகை | பரிசுக்குரிய பாடம் |
|---|---|---|---|---|
| 7. | திரு.ஜி.என்.ரகு<br>அசோக் ஆயில்ஸ்,<br>60,சந்தப்பேட்டை, குடியாத்தம் | திரு.ஜி.எம்.நரசிம்மகுப்தா<br>அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பி.ஏ., இணைப்பாடம்<br>வணிகவியல் பாடத்தில் முதல்<br>மதிப்பெண் பெற்றவருக்கு |
| 8. | திரு.டி.ஜீவராஜ் & சன்ஸ்,<br>83,சந்தப்பேட்டை, குடியாத்தம். | திரு.டி.ஜீவராஜ் & சன்ஸ்,<br>அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | எம்.எஸ்ஸி., கணிதப்பாடத்தில்<br>முதல் மதிப்பெண்பெற்றவருக்கு |
| 9. | டாக்டர்.எம்.எஸ்.திருநாவுக்கரசு,<br>எம்.பி.பி.எஸ்., டி.சி.எச்.,<br>சுவாமி மருத்துவமனை, குடியாத்தம். | திரு.எம்.வி.சுவாமிநாதமுதலியார்,<br>அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பி.எஸ்ஸி., கணிதப்பாடத்தில்<br>முதல் மதிப்பெண் பெற்றவருக்கு |
| 10. | டாக்டர். ஏ.கே.கிருஷ்ணசாமி,<br>எம்.பி.பி.எஸ்.,<br>முகவர்த்தம்மருத்துவமனை, குடியாத்தம். | முகவர்த்தம்,<br>அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பி.எஸ்ஸி., இயற்பியல் பாடத்தில்<br>முதல் மதிப்பெண் பெற்றவருக்கு |
| 11. | டாக்டர். எஸ்.சுகுமார், எம்.டி.,<br>டாக்டர்.வி.ஜி.கோதண்டபாணி,எம்.டி<br>ஜி.பி.எம். குடியாத்தம். | டாக்டர்.எஸ்.சுகுமார்,<br>டாக்டர்.வி.ஜி.கோதண்டபாணி,<br>அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பி.எஸ்ஸி., வேதியியல் பாடத்தில்<br>முதல் மதிப்பெண் பெற்றவருக்கு |
| 12. | திரு. பி.கே.ரகுராம்,<br>ரகுராம் தியேட்டர், குடியாத்தம். | திரு.பி.எஸ்.கிருஷ்ணமூர்த்திநாயுடு<br>அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பி.எஸ்ஸி., தாவரவியல் பாடத்தில்<br>முதல் மதிப்பெண் பெற்றவருக்கு |
| 13. | டாக்டர். ஆர்.கே.திருவள்ளுவன்,<br>32ஏ, கட்ட சுபேதார் தெரு, குடியாத்தம். | திருமதி & திரு.ஆர்.கமலநாதன்,<br>அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பி.எஸ்ஸி., விலங்கியல் பாடத்தில்<br>முதல் மதிப்பெண் பெற்றவருக்கு |



| வ. எண். | அறக்கட்டளையை உருவாக்கியவர் | அறக்கட்டளைப் பரிசின்பெயர் | அறக்கட்டளைத் தொகை | பரிசுக்குரிய பாடம் |
|---|---|---|---|---|
| 14. | திரு.பத்மாவதி சீனிவாசன்<br>கொச அண்ணாமலை தெரு,<br>குடியாத்தம் | திரு.பி.ஆர்.சீனிவாச செட்டியார்<br>அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பி.எஸ்ஸி., இணைப்பாடம்<br>புள்ளியியல் பாடத்தில் முதல்<br>மதிப்பெண் பெற்றவருக்கு |
| 15. | தமிழ்நாடு அரசுக்கல்லூரி<br>ஆசிரியர் கழகம், குடியாத்தம்<br>கிளை, குடியாத்தம் | தமிழ்நாடு அரசுக்கல்லூரி<br>ஆசிரியர் கழகம், பேராசிரியர்<br>நரசிங்கம் அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | கல்வியிலும், ஒழுக்கத்திலும்<br>மிகச்சிறந்த மாணவருக்கு |
| 16. | திரு.வி.ஆர்.மாயகேசவன்,<br>35,தர்மைய்யா நாயுடு தெரு,<br>குடியாத்தம். | திரு.டி.வி.ராமவரதராஜுலு<br>நாயுடு அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | தமிழ் & ஆங்கிலம் கட்டுரைப்<br>போட்டியில் முதலிடம் பெறும்<br>மாணவர்களுக்கு |
| 17. | டாக்டர்.கே.எம்.கணேசன்,எம்.டி.,<br>சின்னா முதலித்தெரு,புதுப்பேட்டை,<br>குடியாத்தம். | திருமதி.கல்யாணி<br>திரு.எம்.முனிரத்தினம்முதலியார்<br>அறக்கட்டளைப் பரிசு | ரூ. 3,000/- | தமிழ் & ஆங்கிலம் பேச்சுப்<br>போட்டியில் முதலிடம் பெறும்<br>மாணவர்களுக்கு |
| 18. | திரு.வி.பழனி முதலியார்,<br>149, பிராட்வே, சென்னை-108 | திரு.வி.பழனி முதலியார் சன்ஸ்<br>அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | கல்லூரிகளுக்கிடையேயான<br>விளையாட்டுப் போட்டிகளில்<br>சிறப்பிடம் பெறும் இக்கல்லூரி<br>மாணவர்களுக்கு |
| 19. | தேசிய வித்யா கேந்திர டிரஸ்ட்,<br>141-ஏ, பேர்ணாம்பட் ரோடு,<br>குடியாத்தம். | தேசிய வித்யா கேந்திர டிரஸ்ட்,<br>சரஸ்வதி வித்யாலயா<br>அறக்கட்டளைப்பரிசு | ரூ. 3,000/- | பொது அறிவு மற்றும் வினாடி<br>வினா போன்றவற்றில் முதலிடம்<br>பெறும் மாணவர்களுக்கு |

## 3.விலகிக் கொள்ளுதல் பற்றிய விதிமுறைகள் :

1. ஒருபருவத்தின் இடையே மாணவர் எவரேனும் கல்லூரியை விட்டு விலகினால் செலுத்தப்பட்ட கட்டணத்தைத் திருப்பி அளிக்கும்படி கோருவதற்கு உரிமை இல்லை. எனினும் தகுதியுடைய அதிகாரி அது குறித்துப் பரிசீலித்து முழுமையாகவோ ஒரு பகுதியாகவோ கட்டணத்தைத் திரும்ப அளிக்கலாம்.

2. ஒரு பருவத்தில் முதல் ஐந்து நாள்களுக்குள் மாற்றுச் சான்றிதழ் கோரி ஒரு மாணவர் விண்ணப்பித்தால்,

அ. அவர் முந்தைய பருவத்திற்குரிய கட்டணங்கள், நிலுவைகள் அனைத்தையும் செலுத்தியும்.

ஆ. மாற்றுச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கும் பருவத்தில் அவர் பெயரில் வருகைப் பதிவாகியிராமலும் இருந்தால் அவருக்கு மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படும்.

3. ஒரு பருவத்தின் ஏதாவது ஒரு நாளில் ஒரு மாணவர் மாற்றுச் சான்றிதழ் கோரி விண்ணப்பித்தால் அந்தப் பருவத்திற்குரிய அனைத்துக் கட்டணங்களையும் செலுத்தி அனைத்து நிலுவையையும் தீர்த்த பின்னரே அவருக்கு மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படும்.

4. கல்லூரியில் இருந்து விலகியபின் ஓராண்டுக்குள் மாற்றுச் சான்றிதழும் நடத்தைச் சான்றிதழும் கோரி விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு எத்தகைய கட்டணமும் இன்றி அவை வழங்கப்படும். ஆனால் கல்லூரியில் இருந்து விலகி ஓராண்டு கழிந்த பிறகு இவ்விரு சான்றிதழ்களையும் கோரும் மாணவர்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ.8 கட்டணம் செலுத்திய பிறகே வழங்கப்படும்.

5. மாற்றுச் சான்றிதழ் மற்றும் நடத்தைச் சான்றிதழ் ஆகியவற்றின் மூலச்சான்றினை இழந்தவர்கள் கல்லூரியில் இருந்து விலகி ஓராண்டுக்குள் மாற்றுச் சான்றிதழ், நடத்தைச் சான்றிதழ் ஆகியவற்றின் நகல்களைக் கோரி விண்ணப்பித்தால் ரூபாய் ஒன்றும், ஓராண்டு கழிந்தபின் விண்ணப்பித்தால் மேற்குறிப்பிட்ட ரூபாய் ஒன்றுடன் கூடுதலாக ரூபாய் மூன்று ஒறுப்புத் தொகையும், மூலச்சான்றிதழ் திரும்பப்பெறஇயலாத நிலையில் தொலைந்து விட்டமைக்கு மாவட்ட நீதிபதியிடமிருந்து (Magistrate) வெற்றசான்றிதழும் செலுத்திய பிறகு வழங்கப்பெறும்.



## 4. வருகைப்பதிவும் விடுப்பும்

1. கல்லூரிக்கு வர இயலாத மாணவர்கள் முன்னதாகவே விடுப்பு வேண்டி முதல்வருக்கு விண்ணப்பிக்க வேண்டும். தவிர்க்க இயலாத காரணங்களால் முன்னதாக விண்ணப்பிக்க இயலாது போய்விட்டால் ஏறத்தாழ விடுப்புத் தேவையான நாள்களைக் குறிப்பிட்டு அஞ்சல் மூலம் விண்ணப்பிக்கலாம். மீண்டும் அம்மாணவர் கல்லூரிக்குத் திரும்பிய நாளன்று தான் வராதிருந்த நாள்களைக் குறிப்பிட்டு முறையான விடுப்பு விண்ணப்பம் அளிக்க வேண்டும். காரணங்கள் பொருத்தமானவையாக இருப்பின் உரிய காலத்தில் அளிக்கப்பெறும் விண்ணப்பத்தின் பேரில் உடல்நலக்குறைவு காரணமாக மூன்று நாள்களுக்கு மேல் விடுப்பு வேண்டின் கல்லூரி முதல்வர் மருந்துவச் சான்றிதழ் அளிக்கும்படிக் கேட்கலாம்.

2. முதல்வரிடம் முன் அனுமதி பெறஇயலாமைக்குத் தகுந்த காரணம் காட்ட இயலாத நிலையில், ஒரு வாரம் முறையான விடுப்புப் பெறாது கல்லூரிக்கு வராதிருந்து விட்ட மாணவர் பெயர், பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.

3. கீழ்க்காணும் இனங்களில் முதல்வர் மனநிறைவு பெற்றாலன்றிப் பல்கலைக்கழகத் தேர்வு எழுதத்தேவைப்படும் ஆண்டு வருகைச் சான்றிதழ் வழங்கப் பெறமாட்டாது.

அ. பயிற்சிக் காலத்தை மனநிறைவு ஏற்படும் வகையில் முடித்திருக்க வேண்டும்.

ஆ. மாணவர் முன்னேற்றமும் நடத்தையும் மனநிறைவளிக்கக் கூடிய வகையில் இருந்திருக்க வேண்டும்.

இ. ஒரு கல்வியாண்டின் வேலை நாள்களில் முக்கால் பங்கு நாள்கள் வகுப்புகளுக்கு வந்திருக்க வேண்டும்.

ஈ. முதலாமாண்டு மாணவர்கள் கட்டாய உடற்பயிற்சி வகுப்புகளில் முக்கால் பங்கு வகுப்புகளுக்கு வந்திருக்க வேண்டும்.

உ. அறிவியல் மாணவர்கள் தாம் தேர்ந்தெடுத்த அறிவியல் பாடச் செய்முறைப் பயிற்சியினைச் செவ்வனே முடித்திருக்க வேண்டும்.

## 5. வருகைச் சான்றிதழ் பற்றிய விதிகள்

1. ஒவ்வொரு கல்வியாண்டிலும் கல்லூரி வரையறுத்துள்ள வேலை நாள்களுக்குள் முக்கால் பங்கு நாள்களுக்கேனும் வகுப்புகளுக்கு வரும் மாணவர்கள் மட்டுமே வருகைச் சான்றிதழ் பெறத் தகுதி உடையவர் ஆவர்.

2. திருப்திகரமான முன்னேற்றம், நன்னடத்தை இல்லாத மாணவர்களுக்கும் கல்லூரிக் கட்டணங்களையும் நிலுவைகளையும் செலுத்தாதோர்க்கும், நூலகப் புத்தகங்களைத் திருப்பி அளிக்காத மாணவர்களுக்கும், இதுபோன்ற வேறு குறைபாடுகள் உள்ளவர்களுக்கும் கல்விப் பருவச் சான்றிதழ்கள் (Term Certificate) அனுப்பப் படமாட்டா.

## 6. உடை, நடத்தை, ஒழுக்கம்

1. ஒவ்வொரு மாணவரும் தூய, கண்ணியமான ஆடைகளையே அணிய வேண்டும். மாணவர்கள் லுங்கி அணிதல் கூடாது. அரைக்கால் சட்டை மற்றும் பனியன் அணிந்து வருதல் கூடாது. அனைத்து மாணவர்களும் எளிய கண்ணியமான ஆடைகளையே அணியும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

2. மரியாதை தெரிவிக்கும் வகையில் நாள்தோறும் ஒவ்வொரு மாணவரும் முதன் முறையாக ஆசிரியர்களைக் காணும்போது வணக்கம் செலுத்த வேண்டும்.

3. வாயில்கள், நடைபாதைகள், தாழ்வாரங்கள், படிக்கட்டுகள், ஆகிய இடங்களில் கூட்டமாய் நிற்பது கடுமையாகத் தடை செய்யப்படுகிறது.

4. வகுப்புகள் தொடங்கும் முன், முதல் மணி அடித்தவுடன் மாணவர்கள் வகுப்பறைக்குச் சென்று அமைதியாக இருத்தல் வேண்டும்.

5. ஆசிரியர் வகுப்பில் இருப்பினும் இல்லாவிடினும் வகுப்பினுள் நுழைந்த பிறகு மாணவர்கள் கட்டாயமாக அமைதி காத்தல் வேண்டும்.

6. ஆசிரியர் வகுப்பில் நுழையும்போது மாணவர்கள் எழுந்து நிற்க வேண்டும். அவர் அமரச் சொன்ன பிறகு அல்லது அவர் தமது இருக்கையில் அமர்ந்த பிறகு தான் மாணவர்கள் உட்கார வேண்டும்.

7. ஆசிரியர் வகுப்புக்கு வந்த பிறகு எந்த மாணவரும் வகுப்பில் நுழைதல் கூடாது. தாமதமாக வரும் மாணவர் முதல்வரையோ அல்லது முதல்வர் பொறுப்பில் உள்ளவரையோ கண்டு அனுமதிச் சீட்டு பெற்றுவந்தால் மட்டுமே வகுப்பில் அனுமதிக்கப்படுவர்.

8. ஒரு வேளை மாணவர் வேலை நாளின் ஒரு பகுதிக்கு வகுப்புக்கு வராது போக விரும்பினாலும் அல்லது ஒரு பகுதிக்கு மட்டும் வர நேர்ந்தாலும் முதல்வரைக் கண்டு அதற்கு அனுமதி பெறவேண்டும். இம்முறையைப் பின் பற்றவில்லை எனில் அவர் விடுப்புப் பெறாது கல்லூரிக்கு வராதவராகவே கருதப்படுவார்.

9. எந்த மாணவரும் ஆசிரியரின் அனுமதியின்றி வகுப்பை விட்டு வெளியேறக்கூடாது.

10. கல்லூரிக் கட்டணம் செலுத்துவது, நூலகத்தில் புத்தகம் எடுப்பது போன்றகாரணங்களுக்காக எந்த மாணவரும் வகுப்பை விட்டுச் செல்லவோ தாமதமாக வரவோ, அனுமதிக்கப்படமாட்டார்.

11. முதற்சுழற்சி, இரண்டாம்சுழற்சி இருவேளைகளிலும் முதல் மணி அடித்தவுடன் மாணவர்கள் தத்தம் வகுப்பறையில் குழுமிவிட வேண்டும்.

12. மாணவர்கள் தமக்குரிய வகுப்புகளைத் தவிரப் பிறவகுப்பறையில் எக்காரணம் கொண்டும் முதல்வரின் எழுத்துமூலமான அனுமதியின்றி நுழைதல் கூடாது.

13. எந்த மாணவராவது தெரிந்தோ தெரியாமலோ கல்லூரித் தளவாடங்களை (Furniture) உடைத்துவிட்டாலோ கல்லூரிப் பொருட்களுக்குச் சேதம் விளைவித்து விட்டாலோ அதன் விலையையும் முதல்வர் விதிக்கும் ஒறுப்புத் தொகையையும் அம்மாணவர் செலுத்த வேண்டும்.



14. ஒரு வகுப்பறையிலிருந்து மற்றொரு வகுப்பறைக்கு மாறிச் செல்லும் போது மாணவர்கள் முறையாகவும், ஒழுங்காகவும் செல்ல வேண்டும். வகுப்புகளுக்கு இடையூறு நேர்வதைத் தவிர்க்க வகுப்புகள் தொடங்குவதற்கு முன்னர் மட்டுமே மாணவர்கள் தாழ்வாரங்களைப் பயன்படுத்த வேண்டும்.

15. (சுவர்களில் எழுதுவது, ஜன்னல் கண்ணாடிகளை உடைப்பது போன்று) கல்லூரி வளாகத்தில் அதன் தளவாடங்களுக்கும் மற்ற பொருள்களுக்கும் சேதம் விளைவிப்பதும் அவற்றை உருக்குலைப்பதும் கடுந்தண்டனைக்கு உரியவையாகும். இவையாவற்றிலும் சேதப்பட்ட பொருள்களின் விலை, ஒறுப்புத் தொகையோடு வசூலிக்கப்படும். நடத்தைச் சான்றிதழிலும் பதிவு செய்யப்படும்.

16. கல்லூரிக்கு வரும்போதும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் போதும் மாணவர்கள் தங்களுக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்க்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

17. எந்த நிகழ்ச்சியின் போதும் நாட்டுப்பண் இசைக்கப்படும் போது அனைத்து மாணவர்களும் எழுந்துஅசையாது நின்று மரியாதை செலுத்த வேண்டும்.

18. கல்லூரி வளாகத்துக்குள் புகைபிடித்தல், தாழ்வாரங்களில் சுற்றித் திரிதல், எச்சில் துப்புதல், உரிய இடங்களிலன்றிக் காகிதத் துண்டுகளையும் குப்பைகளையும் எறிதல் ஆகியவை தடை செய்யப்படுகின்றன.

19. முதல்வரிடம் எழுத்து மூலம் அனுமதி பெற்றாலன்றி எந்த விதமான நிதி வசூலிலும் ஈடுபடக்கூடாது.

20. மாணவர் கட்சி அரசியல், இன அரசியல் போராட்டங்களில் ஈடுபடுதல் தடை செய்யப்படுகின்றன.

21. கல்லூரிப் பொருள்களை மாணவர்கள் மிகுந்த கவனத்துடன் கையாள வேண்டும். அறிந்தோ அறியாமலோ அவை சேதப்படுத்தப்பட்டால் அவற்றின் விலை மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படுவதுடன் கடும் ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படும்.

22. பின்வரும் அரசாணை மாணவர்களுக்குச் சுட்டப்படுகிறது. வேலை நிறுத்தம் செய்யும் அல்லது வேலை நிறுத்தத்தில் பங்கேற்கும் மாணவர்களுக்குத் தமிழகக் கல்வி விதி 92ன் கீழ் வழங்கப்படும் கல்விச் சலுகைகள் அனைத்தும் நீக்கப்பெறும் என அரசு அறிவிக்கிறது. (அரசாணை எம்.எஸ்.எண்.497 கல்வி மார்ச் 1948)

23. பாடம் நடத்த இடையூறு செய்கிறஅல்லது வகுப்புக்கு ஊறு செய்கிற மாணவர் அவ்வகுப்பாசிரியரால் வகுப்பிலிருந்து வெளியேற்றப்படலாம். அவ்வாறு வெளியேற்றப்படும் மாணவர் விடுப்புப் பெறாது வகுப்புக்கு வராதவராகக் கருதப்படுவர். அவர் மீது கடும் தண்டனையும் விதிக்கப்படலாம்.

24. முதல்வரைக் காண விரும்பும் மாணவர், துறைத்தலைவரின் பரிந்துரைக்கப்பட்ட அனுமதிச் சீட்டுடன் தான் காண வேண்டும்.

## 7. நூலகம், படிப்பறை

1. பொது நூலகம், கல்லூரியைச் சேர்ந்த நூலகர் பொறுப்பில் அவர் மேற்பார்வையில் செயல்படும்.

2. ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோர் கல்லூரி நூலக உறுப்பினர் ஆவர்.

3. பார்வைக்கு மட்டும் உரிய நூல்களை (ஆசிரியர்களுட்பட) எவரும் நூலகத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். நூலகம் செயல்படும் அனைத்து நாள்களிலும் அந்நூல்களை நூலகத்திலேயே பார்வையிடலாம்.

4. நூலகத்தில் அமைதியும், கண்ணியமும் காக்கப்படல் வேண்டும். கீழ்க்காணும் விதிமுறைகளின் படியே மாணவர்களுக்குப் பொது நூலகத்தில் நூல்கள் தரப்படும்.

அ. உரிய படிவத்தில் புத்தகம் வேண்டி விண்ணப்பிக்க வேண்டும்.
ஆ. ஒரு மாணவர் ஒரு நேரத்தில் ஒரு நூல் மட்டுமே பெறலாம்.
இ. தாம் பெற்றநூலை மற்றொருவர்க்குக் கொடுத்தல் கூடாது.
இவ்விதியை மீறினால் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

ஈ. புத்தகம் பெற்றவர் அதனை 15 நாள்களுக்கு மட்டுமே வைத்திருக்கலாம். நூலைத் திருப்பி அளிக்க வேண்டிய நாள் விடுமுறையாக இருப்பின் அதற்கடுத்த வேலை நாளில் திருப்பித்தரலாம். ஆயினும், இந்த விதி கோடை விடுமுறை பருவ விடுமுறை ஆகியவற்றுக்குப் பொருந்தாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் விடுமுறை தொடங்கும் நாளுக்கு முன்னரே புத்தகங்களைத் திருப்பி அளிக்கவேண்டும். ஒரு நூலை நூலகரிடம் தந்து விட்டு ஒரு மாணவர் மேலும் 7 நாள்கள் தானே அதை வைத்திருக்க அனுமதி கோரினால், அப்புத்தகத்தை வேண்டி வேறு யாரும் விண்ணப்பித்திருக்கவில்லை எனில், நூலகர் அவ்வேண்டுகோளை ஏற்கலாம்.

உ. குறிப்பிட்ட காலத்தில் பெரிதும் விரும்பிக் கோரப்படும் எந்த ஒரு நூலும், நூலகத்தில் பார்வையிட மட்டுமே அல்லது முதல்வர் குறிப்பிடும் குறைந்த காலத்துக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஊ. மாணவருக்கு வழங்கப்பட்ட எந்த நூலையும், எப்போது வேண்டுமானாலும் திரும்பக் கோர முதல்வருக்கு உரிமை உண்டு.

எ. பெற்றுச் சென்றநூலினை உரிய நாளில் திருப்பித்தரவில்லை எனில், நாள் ஒன்றுக்கு 10 காசுகள் வீதம் ஒறுப்புத் தொகை கட்ட வேண்டும். (கல்வித் துறை அரசு ஆணை 463 தேதி 8.4.86) அப்புத்தகத்தைத் திரும்பத் தந்து ஒறுப்புத் தொகையும் செலுத்திய பின்னரே அம்மாணவர் தொடர்ந்து நூலகத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்.

ஏ. மாணவர் நூலகத்தில் இருந்து நூலினைப் பெறும் போதே அந்நூல் பழுதுபடாமல் நல்லநிலையில் உள்ளதா எனச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். நூலின் பக்கங்கள் கிழிக்கப்பட்டிருந்தாலோ, எடுக்கப்பட்டு இருந்தாலோ, வேறு வகையில் புத்தகம் பழுது பட்டிருந்தாலோ அதனை உடனே நூலகரின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும். இல்லையெனில் அம்மாணவரே, அப்பழுதுக்குப் பொறுப்பாவார். நூலைத் திரும்ப அளிக்கும்போது, இறுதியாக அந்நூலைப் பயன்படுத்திய மாணவரே அதிலிருக்கும் குறைகளுக்கும் பொறுப்பேற்க நேரிடும்.



ஐ. நூல்களைத் திரும்பப் பெறும்போது நூலகர் அவற்றைச் சோதனையிட்டு எவையேனும் குறைகள் இருப்பின் முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். இவ்விதி துறைநூலகங்களுக்கும் பொருந்தும்.

ஒ. நூலினைப் பெற்றவர் அதைத் தொலைத்துவிட்டால் நூலின் விலையின் ஐந்து முதல் பத்து மடங்கும், முதல்வர் விதிக்கக்கூடிய ஒறுப்புத் தொகையையும் செலுத்த வேண்டும்.

ஓ. ஒரு தொகுதியில் ஏதேனும் ஒரு பகுதியை மட்டும் தொலைத்திருந்து அந்தத் தனிநூல் மட்டும் வாங்கக் கிடைக்காதிருந்தால் அத்தொகுதி முழுமைக்கான விலையில் ஐந்து முதல் பத்து மடங்கு வசூலிக்கப்படும்.

ஔ. நூல் வாங்கும் முறைகள், நாள்கள் முதலியவை நூலகப் பொறுப்பாளரால் அறிவிக்கப்படும்.

5. ஆசிரியர்கள் யாரும் அப்போதைக்குரிய பாடநூல்களைத் தவிர வேறு நூல்களை ஒரு மாதத்துக்கு மேல் வைத்திருக்கக் கூடாது.

6. தேர்வு நுழைவுச் சீட்டு வேண்டின் நூலகத்தில் இருந்து நிலுவை இன்மைச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

## 8. பயிற்றாசிரியர் திட்டம் (Tutorial System)

1. கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒவ்வொரு மாணவரும் கல்லூரி ஆசிரியர் ஒருவரின் பொறுப்பில் ஒப்படைக்கப்படுவார். அம்மாணவர், தன் பொறுப்பாசிரியரிடம் தன் கல்வி முன்னேற்றம் பற்றித் தக்க அறிவுரை பெறலாம்.

2. ஒவ்வொரு மாணவரும் எல்லா விண்ணப்பங்களையும் பொறுப்பாசிரியர் மூலமே பணிந்தனுப்ப வேண்டும்.

## 9. கல்விசார் மன்றங்கள்

இக்கல்லூரியில் கீழ்க்கண்ட மன்றங்கள் உள்ளன.

1. தமிழ் மன்றம்
2. ஆங்கில மன்றம்
3. பொருளியல் மன்றம்
4. வணிகவியல் மன்றம்
5. கணிதவியல் மன்றம்
6. இயற்பியல் மன்றம்
7. வேதியியல் மன்றம்
8. தாவரவியல் மன்றம்
9. கணினிஅறிவியல் மன்றம்
10. வரலாறு மன்றம்
11. விலங்கியல் மன்றம்
12. வணிக நிர்வாகவியல் மன்றம்
13. கணினிப்பயன்பாட்டியல் மன்றம்

2. ஒவ்வொரு மன்றத்திற்கும் பட்டப்படிப்பு மூன்றாமாண்டு மற்றும் பட்ட மேற்படிப்பு முதல், இரண்டாமாண்டு மாணவர்களிலிருந்து செயலரும், பட்டப்படிப்பு இரண்டாமாண்டு மாணவர்களிலிருந்து இணைச்செயலரும் தேர்வு செய்யப்பெறுவர்.

இரண்டாம் சுழற்சி பாடங்கள் நடைபெறும் துறைகளில் மட்டும், இரண்டாமாண்டு மாணவர்களிலிருந்து ஒரு இணைச்செயலரும் தேர்வு செய்யப்பெறுவர்.

3. கல்லூரியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்ட மாணவர்கள், தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர்கள் ஆவர்.

## மேனாள் மாணவர் சங்கம் (Old Student Association)

இக்கல்லூரியின் மேனாள் மாணவர் சங்கம் (Old Student Association) 2011-2012-ஆம் கல்வியாண்டில் 7-9-2011 அன்று இனிதே தொடங்கப்பெற்றது.

இக்கல்லூரியில் படித்து இன்றுவரை சமூகத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் பல மேனாள் மாணவர்கள், இக்கல்லூரியின் வளர்ச்சிப்பணியில் நாட்டங்கொண்டு உறுப்பினராக - புரவலராகத் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர்.

## அரசினர்திருமகள் ஆலைக்கல்லூரி, குடியேற்றம்.

### மாணவர் அடையாள / நடத்தை / வருகைப்பதிவுச் சான்றிதழ்

மாணவர் பெயர் :

வகுப்புப் பயிற்றுமொழி :

சுழல் எண் :

தேர்ச்சி விபரம் :

வருகைப் பதிவு :

நடத்தை :

இதர குறிப்புரை :

மாணவர் கையொப்பம் :

பொறுப்பாசிரியர் கையொப்பம் :

துறைத்தலைவர் கையொப்பம் :

குறிப்பு :

மாணவர்கள் தங்களுக்குச் சேரவேண்டிய உதவித்தொகை, தமிழ் உதவித்தொகை, புகைவண்டிச் சலுகை, பேருந்துச் சலுகை முதலியவற்றைப் பெற மேற்கண்ட படிவத்தில் அடையாளச் சான்றிதழ் அளித்தால் தான் சலுகைகள் வழங்கப்பெறும்.

## விளையாட்டுக்கழகம் (Athletic Association)

1. இக்கழகம் அரசினர் திருமகள் ஆலைக்கல்லூரி விளையாட்டுக் கழகம் என அழைக்கப்பெறும்.

2. கல்லூரியின் விளையாட்டு அணிகளின் தலைவர்களை முதல்வரின் ஒப்புதலுடன் உடற்கல்வி இயக்குநர் தேர்ந்தெடுப்பார்.

3. கழகத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் 1. முதல்வர் (பதவி முறைத் தலைவர்) 2. உடற்கல்வி இயக்குநர் (பதவி முறைச் செயலர்) 3. முதல்வரால் நியமிக்கப்படும் மூன்று பேராசிரியர்கள் 4. கல்லூரி விளையாட்டு அணிகளின் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவினால் நிர்வகிக்கப்படும்.



NCC S.NO Year

## தேசிய மாணவர் படை (National Cadet Corps)

தேசிய மாணவர் படை அமைப்பில் சேரும் மாணவர்கள், குறைந்தது இரண்டாண்டுகள் முழுமையாக பயிற்சி பெறுதல் அவசியம்.

மாணவர்களிடையே தலைமைப் பண்பு, நட்பு, சேவை மனப்பான்மை, அதிகாரிக்குரிய பண்பு ஆகியவற்றைப் பயிற்றுவிப்பதே நோக்கமாகும்.

தேசிய மாணவர் படையில் சேர்ந்த மாணவர், வாரம் ஒன்றிற்குச் சுமார் 4 மணிநேரம் அணிவகுப்பைச் செய்யவேண்டும். ஒவ்வொரு மாணவரும் வருடாந்திர முகாம் (Annual Camp) அல்லது பல்நிலைப்பிரிவு சமூக சேவை முகாம் (Combined Cadre and Social Service Camp) முதலான முகாம்களில் கலந்து கொள்ளுதல் வேண்டும்.

தேசிய மாணவர்படை மாணவர்களுக்குப் பின்வரும் முக்கிய சான்றிதழ்கள் வழங்கப்பெறும்.

1. பணிப் பருவங்களை வெற்றிகரமாக முடித்தபின்பு விலக்குச் சான்றிதழ் (Discharge Certificate)

2. பி மற்றும் சி தேர்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மத்திய பாதுகாப்புத் துறையால் வழங்கப்படும் சான்றிதழ்கள்

## நாட்டு நலப்பணித்திட்டம் (National Service Scheme)

நம் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டம் நான்கு அலகுகளாகச் செயல்பட்டு வருகின்றது. நாட்டு நலப்பணித்திட்டத்தில் சேரும் மாணவர்கள் ஆண்டு ஒன்றிற்கு 120 மணிநேரம் பணி செய்திட வேண்டும். மாணவரிடையே தொண்டு மனப்பான்மையை வளர்க்கும் நோக்கத்தில் செயல்படும். ஒவ்வொரு ஆண்டும் நாட்டுநலப்பணித் திட்ட மாணவர்களுக்கு ஏழு நாள் சிறப்பு முகாம் ஒன்று நடத்தப்பெறும்.

## விபத்துக் காப்புறுதித் திட்டம்

கல்லூரியில் முதலாமாண்டு சேரும் மாணவ, மாணவியர்களிடமிருந்து பின்வருமாறு விபத்துக் காப்புறுதிக்கான கட்டணம், வசூலிக்கப்பட்டுக் காப்புறுதி நிறுவனத்திடம் மாணவர் கூட்டுக் காப்புறுதிக்காகச் (Group Insurance) செலுத்தப்படுகிறது.

முதலாமாண்டு பட்ட வகுப்பு - ரூ.37.00
முதலாமாண்டு எம்.எஸ்ஸி., - ரூ.24.00
முதலாமாண்டு எம்.சி.ஏ., - ரூ.37.00

தங்கள் படிப்புக்காலம் முடிவடையும் வரை மாணவர்களுக்குக் கல்லூரியிலோ அன்றி வெளியிலோ விபத்து ஏற்பட்டு, இறப்பு அல்லது காயங்கள் ஏற்பட்டால் உரிய இழப்பீடு, நிறுவனத்தால் வழங்கப்படும். எனவே அனைத்து மாணவ, மாணவியரும் தங்களுக்கு ஏற்படும் விபத்துக் குறித்துத் துறைத்தலைவர் மூலம் முதல்வருக்குத் தவறாது தெரிவித்து, விபத்துக் காப்பீட்டுப் பயன் பெறுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.